080/DD/20

T.C-009

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST IN THE TAMIL NADU SERVICES MANUAL VOLUME – I FOR THE STAFF OF THE TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், அவற்றில் **எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Appointments, postings and promotions of District Judges in any States shall be made by

(A) The High Court (B) The Governor

(C) The Chief Minister (D) The District Collector

மாவட்ட நீதிபதிகளின் பணி நியமனம், பணியானை, பதவியுயர்வு ஆகியவை யாரால் ஆணையிடப்படும்?

(A) உயர்நீதிமன்றம் (B) ஆளுநர்

(C) முதலமைச்சர் (D) மாவட்ட ஆட்சித்தலைவர்

2. There shall be something for all citizens in matters relating to employment or appointment to any office under the State

(A) Integrity (B) Devotion to duty

(C) Equality of opportunity (D) Sincerity

மாநில அரசின்கீழ் இயங்கும் எந்த ஒரு அலுவலகத்திலும், வேலைவாய்ப்பு, பணிநியமனம் ஆகியவை தொடர்பான நேர்வுகளில், குடிமக்கள் அனைவருக்கும் இருக்க வேண்டியது

(A) நேர்மை (B) கடமை ஈடுபாடு

(C) ஒத்த வாய்ப்பு (D) உள்ளார்ந்த ஈடுபாடு

3. Under which article of constitution of India, the acts of the appropriate legislature may regulate the recruitment and conditions of service of persons appointed to public services in connection with the affairs of any State

(A) 236 (B) 251

(C) 301 (D) 309

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ், சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள், ஒரு மாநிலத்தின் அலுவல் தொடர்பாக பொதுப்பணிகளில் நியமிக்கப்படும் நபர்களின் பணியமர்த்தம் மற்றும் பணிநிபந்தனைகள் ஆகியவற்றை முறைப்படுத்தலாம்

(A) 236 (B) 251

(C) 301 (D) 309

4. A member of an All-India Service or a Civil Service of a State shall not be dismissed or removed by an authority subordinate to that by which he was appointed as per Article

(A) 311 (B) 313

(C) 315 (D) 316

எந்த இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவின்படி, அனைத்திந்தியப் பணி அல்லது ஒரு மாநிலத்தின் குடிமுறைப் பணி ஆகியவற்றின் ஒரு உறுப்பினரை, அன்னாரை நியமனம் செய்த அதிகாரிக்குச் சார்நிலையில் உள்ள ஒரு அதிகாரியால் பணியறவு செய்யவோ பணிநீக்கம் செய்யவோ முடியாது

(A) 311 (B) 313

(C) 315 (D) 316

5. The establishment of Public Service Commission for each State is recommended as per Article ———— of the Constitution of India.

(A) 314 (B) 315

(C) 317 (D) 318

ஒவ்வொரு மாநிலத்திலும், ஒரு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயல்படவேண்டும் என்று பரிந்துரைத்த இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு

(A) 314 (B) 315

(C) 317 (D) 318

6. In the case of the Union Public Service Commission, the Chairman and other Members shall be appointed, by the ————.

(A) Human Resources Development Minister

(B) Lieutenant Governor, Delhi (NCT)

(C) President

(D) Prime Minister

நடுவணரசுப் பணியாளர் தேர்வாணையத்தைப் பொருத்தவரையில், அதன் தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றவர்

(A) மனிதவள மேம்பாட்டு அமைச்சர்

(B) துணைநிலை ஆளுநர், தில்லி (NCT)

(C) குடியரசுத் தலைவர்

(D) பிரதம மந்திரி

7. A person who holds office as a member of a Public Service Commission shall on the expiration of his term of office, be

(A) Eligible for reappointment to that office

(B) Ineligible for reappointment to that office

(C) Allowed to continue his services for 3 years

(D) Granted extension of service only upto 1 year

அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராயிருந்த ஒருவர், அவரது பதவிக்காலம் முடிவுற்றபின்னர்

(A) மறுநியமனத்திற்குத் தகுதியானவர்

(B) மறுநியமனத்திற்குத் தகுதியற்றவர்

(C) 3 ஆண்டுகள் பணியில் தொடரலாம்

(D) 1 ஆண்டு மட்டும் பணிநீட்டிக்கலாம்

8. The Commission's existing Regulations are called Tamil Nadu Public Service Commission Regulations ————.

(A) 1950 (B) 1954

(C) 1971 (D) 1978

தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள் ———— என்று அழைக்கப்படுகின்றன.

(A) 1950 (B) 1954

(C) 1971 (D) 1978

9. The Commission shall consist of Chairman and ———— other Members.

(A) Five (B) Six

(C) Fourteen (D) Eight

தேர்வாணையம், தலைவர் மற்றும் ———— உறுப்பினர்களைக் கொண்டது.

(A) ஐந்து (B) ஆறு

(C) பதினான்கு (D) எட்டு

10. A Member of the Public Service Commission, who on the date of appointment was not innervate shall not be paid Pension unless he has completed service for not less than ———— years.

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் ———— வருடங்களுக்குக் குறையாமல் பணியாற்றிடாத நியமனத்தின் போது பணியில் இல்லாத உறுப்பினர் ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது.

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

11. If a Member of the Commission, after his retirement hold office as the Chairman of a State Public Service Commission or Chairman or Member of the Union Public Service Commission, during such period the Pension shall ———— as per the proviso to regulation 7(3)(ii) of Tamil Nadu Public Service Commission Regulations.

(A) Be payable
(B) Not be payable
(C) Be partly payable
(D) Be paid only in special cases

தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர், ஓய்வுபெற்றபின், ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ, அல்லது நடுவணரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினராகவோ பணியாற்றினால், அந்தக் காலகட்டத்திற்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை 7(3)(ii) இன்படி ஓய்வூதியம்

(A) வழங்கப்படும்
(B) வழங்கப்படமாட்டாது
(C) ஒருபகுதி வழங்கப்படும்
(D) சிறப்பு நேர்வுகளில் மட்டும் வழங்கப்படும்

12. For the Chairman and Members of the Commission, the Tamil Nadu Government Servants Family Security Fund Scheme introduced in G.O. Ms No. 3637, Finance, dated 20th April 1974 ———— under 7-B of these Regulations.

(A) Shall apply

(B) Shall not apply

(C) Is optional

(D) Shall partly apply with certain modifications.

தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை 7–B–இன்படி, அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அரசாணை (நிலை) எண் 3637, நிதித்துறை, நாள் 20.04.1974 இல் அறிமுகப்படுத்தப்பட்ட, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம்

(A) பொருந்தும்

(B) பொருந்தாது

(C) விருப்பம் சார்ந்தது

(D) சில மாற்றங்களுடன் பகுதிமட்டும் பொருந்தும்

13. Whether the Commission is empowered to employ temporarily, in addition to the six Under Secretaries referred to in clause (1), such number of Under secretaries, as it may deem necessary to cope with occasional and periodical pressure of work ———— as per regulation 8(2) of these Regulations.

(A) Never

(B) Yes, it can do so, without previous sanction

(C) Yes, only one post

(D) Yes, only with the specific prior approval

இவ்வொழுங்குமுறை 8(2)–ன்படி, தேர்வாணையத்தில், குறிப்பிட்ட கால இடைவெளியில் மற்றும் அவ்வப்போது அவசர நெருக்கடியினை ஏற்படுத்தும் வேலைப்பளுவினை எதிர்கொள்ள, இவ்விதியின் கூறு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள சார்புச் செயலாளர்களைத் தவிர, கூடுதலாக, அதே எண்ணிக்கையிலான சார்புச் செயலாளர்களைத் தற்காலிகமாக நியமிக்கத் தேர்வாணையம் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதா?

(A) ஒரு போதுமில்லை

(B) ஆம், முன்அனுமதி பெறாமல், அவ்வாறு செய்யலாம்

(C) ஆம், ஒரு பணியிடம் மட்டும்

(D) ஆம், திட்டவட்டமான முன்அனுமதியுடன் மட்டுமே

14. Who shall be the competent authority to sanction payment of travelling allowance advance to the other members of the Commission as applicable under Article 84 of the Tamil Nadu Financial Code, Volume-I as per the Regulation 15(2).

(A) The Governor
(B) The Chief Minister
(C) The Finance Minister
(D) The Chairman of the Commission

தேர்வாணைய ஒழுங்குமுறை 15(2)–இல் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு, தொகுதி–I–இன் சட்டக்கூறு 84 பொருந்தக்கூடியவாறு, தேர்வாணையத்தின் மற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி முன்பணம் ஒப்பளிக்க தகுதிவாய்ந்த அதிகாரி

(A) ஆளுநர்
(B) முதலமைச்சர்
(C) நிதியமைச்சர்
(D) தேர்வாணையத்தின் தலைவர்

15. Grant of Advance for the purchase of motor cars, to the Chairman or a Member of the Commission will be governed by Article ———— of the Tamil Nadu Financial Code, Volume-I.

(A) 229
(B) 230
(C) 231
(D) 233

தேர்வாணையத்தின் தலைவருக்கோ, உறுப்பினர்களுக்கோ மோட்டார் வாகனம் வாங்க முன்பணம் ஒப்பளிக்க, தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு, தொகுதி–I–இன் எந்தச் சட்டக் கூற்றின்படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(A) 229
(B) 230
(C) 231
(D) 233

16. In cases, where appointment is to be made by promotion from one category to another category or from one class to another class of posts in a State Service specified in Annexure I-B to these regulations,

(A) The Commission shall be consulted
(B) The Commission shall not be consulted
(C) Consulting the Commission is not necessary
(D) Consulting the Commission is optional

மாநிலப் பணிகளின் கீழ் ஒரு வகைப்பிரிவிலிருந்து (category) மற்றொரு வகைப்பிரிவிற்கோ அல்லது ஒரு வகுப்புப் (Class) பணியிடத்திலிருந்து மற்றொரு வகுப்புப் பணியிடத்திற்கோ பதவியுயர்வு மூலம் நியமனம் செய்ய வேண்டிய நேர்வுகளில், தேர்வாணையத்தின் ஒழுங்குமுறைகளின் பின்னிணைப்பு 1–Bஇல் குறிப்பிட்டுள்ளபடி

(A) தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்
(B) தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கக் கூடாது
(C) தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை
(D) தேர்வாணையத்தைக் கலந்தாலோசிப்பது விருப்பம் சார்ந்தது

17. The present Tamil Nadu Public Service Commission Rules of Procedure came into force with effect from

(A) 19th October 1961

(B) 21st October 1978

(C) 31st December 1987

(D) 14th May 1996

தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நடைமுறை விதிகள் செயல்முறைக்கு வந்த நாள்

(A) 19 அக்டோபர் 1961

(B) 21 அக்டோபர் 1978

(C) 31 டிசம்பர் 1987

(D) 14 மே 1996

18. While conducting competitive examinations for direct recruitment, whether the Commission may draft personnel from the Private Educational Institutions for appointment as Invigilator, as per rule 5(b) of these Rules of Procedure

(A) Yes, there is a provision

(B) No provision is there

(C) Only Government Staff can be appointed

(D) Permission should be obtained from Governor

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 5(b)இன்படி நேரடிப் பணியமர்த்துதலுக்கான போட்டித் தேர்வுகளை நடத்தும்போது, தேர்வாணையம் தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்து, தேர்வுக் கண்காணிப்பாளர்களை (Invigilators) நியமிக்க இயலுமா?

(A) ஆம், வழிவகை உள்ளது

(B) வழிவகை இல்லை

(C) அரசுப் பணியாளர்களை மட்டுமே நியமிக்க இயலும்

(D) ஆளுநரின் ஒப்புதல் பெறவேண்டும்

19. Where any interview is conducted by the Commission as part of the Competitive examination for direct recruitment, the service rendered by the candidate in the defence forces shall ———— as per proviso 5 to Rule 5 of these Procedure.

(A) Be taken into account as an additional qualification

(B) Not be considered as an advantage

(C) Be treated as an irrelevant qualification

(D) Be viewed as on over-qualification

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 5–இன் விளக்கக்கூறு (proviso 5) இன்படி போட்டித் தேர்வுகளின் ஒரு பகுதியாக, தேர்வாணையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வுகளில், பணிக்கு விண்ணப்பம் அளித்திருப்பவர்களில் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் சேவை

(A) கூடுதல் தகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும்

(B) அனுகூலமாகக் கருதக்கூடாது

(C) தொடர்பற்ற தகுதியாகப் பாவிக்க வேண்டும்

(D) மிகையான தகுதியாகக் கொள்ள வேண்டும்

20. Where appointment is to be made by promotion from one category to another category in a State Service, for which the Commission is to be consulted and the Departmental Promotion Committee procedure is applicable, a Member of the Commission ———— for the DPC for a specified period, as per rule 6 of these Procedure.

(A) May be nominated to act as Chairman by the Chairman

(B) Cannot be nominated to act as Chairman by anyone

(C) Can be nominated to act as Chairman on his behalf only by the Chief Minister

(D) Can be nominated to act as Chairman only by the Governor

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 6–இன்படி, மாநிலப் பணிகளின்கீழ் ஒரு வகைப்பிரிவிலிருந்து (category) மற்றொரு வகைப் பிரிவிற்கு பதவியுயர்வு மூலம் நியமனம் செய்ய வேண்டிய, இதுபோன்ற தேர்வாணையத்தைக் கலந்தோலாசிக்க வேண்டிய மற்றும் துறைப் பதவியுயர்வுக் குழுவின் நடைமுறை பொருந்தக்கூடிய (applicable) நேர்வுகளில், துறைப் பதவியுர்வுக் குழுக் (Departmental Promotion Committee) கூட்டத்திற்கு, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு, தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவரை

(A) தலைவராகச் செயல்படவைக்க தேர்வாணையத் தலைவர் நியமிக்கலாம்

(B) தலைவராகச் செயல்படவைக்க யாராலும் நியமிக்க முடியாது

(C) தலைவரின் சார்பில் செயல்பட, முதலமைச்சர் மட்டுமே நியமிக்க முடியும்

(D) தலைவராகச் செயல்பட வைக்க, ஆளுநர் மட்டுமே நியமிக்க முடியும்

21. The quorum for holding a Meeting of the Commission, as per the rule 17 of Rules of Procedure, shall be ———— of the Members including Chairman in position.

(A) Two thirds (B) One Third

(C) One fourth (D) Everyone

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 17–இன்படி, தேர்வாணையத்தின் குழுக்கூட்டம் (meeting) நடத்துவதற்கு தலைவரையும் சேர்த்து, குறைந்தபட்சம் இருக்கவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (Quorum)

(A) மூன்றில் இரண்டு பங்கு (Two thirds) (B) மூன்றில் ஒரு பங்கு (One third)

(C) நான்கில் ஒரு பங்கு (One fourth) (D) அனைவரும் (Everyone)

22. As per rule 22 of these Rules of Procedure, a Member of the Commission need not deal with the ordinary work of the Commission and that the files and cases need not be circulated to him for his opinion, when the member is ————

(A) Attending urgent works

(B) Engaged in such work assigned by the Chairman and if so, directed

(C) In a Meeting

(D) On Leave

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 22–இன்படி, எத்தகைய சூழ்நிலையில், தேர்வாணைய உறுப்பினர் ஒருவர், அவரது வழக்கமான தேர்வாணையப் பணிகளைச் செய்ய வேண்டியதில்லை மற்றும் அவரது கருத்துரைக்கு கோப்புகளோ, நேர்வுகளோ சுற்றனுப்பப்பட வேண்டியதில்லை

(A) அவசரப் பணிகளைக் கவனிக்கும்போது

(B) தேர்வாணையத் தலைவர் ஒதுக்கிக் கொடுத்த பணிகளைச் செய்யும்போது, அவ்வாறு பணிக்கப்பட்டால்

(C) கூட்டத்திலிருக்கும்போது (in a meeting)

(D) விடுமுறையில் இருக்கும்போது

23. The Commission shall present to the State Government, a report of its proceedings during the preceding financial year, by the ———— of each year, as per rule 27 of these Procedure.

(A) 14th May (B) 13th June

(C) 15th July (D) 17 August

தேர்வாணைய நடைமுறை விதிகளில், விதி 27–இன்படி முந்தைய நிதியாண்டில், தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை, ஒவ்வோர் ஆண்டும் (எந்த நாளில்) ———— அரசுக்கு அளிக்கவேண்டும்.

(A) 14 மே மாதம் (B) 13 ஜுன் மாதம்

(C) 15 ஜூலை மாதம் (D) 17 ஆகஸ்டு மாதம்

24. The existing Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules came into force on and from the

(A) 1st January 1953
(B) 1st January 1955
(C) 15th March 1957
(D) 30th June 1973

தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் செயல்முறைக்கு வந்த நாள்

(A) 1 ஜனவரி 1953
(B) 1 ஜனவரி 1955
(C) 15 மார்ச் 1957
(D) 30 ஜுன் 1973

25. Under which Rule of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the penalties such as Censure, Fine, withholding of increments can be imposed upon a Government servant,-

(A) Rule 4
(B) Rule 5
(C) Rule 8
(D) Rule 11

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், எவ்விதியின்கீழ்க் கண்டனம், தண்டம் (Fine), ஊதிய உயர்வினை நிறுத்திவைத்தல் ஆகிய தண்டனைகளை, ஒரு அரசுப் பணியாளருக்கு வழங்க முடியும்

(A) விதி 4
(B) விதி 5
(C) விதி 8
(D) விதி 11

26. As per the proviso under the above Rule, the penalty of withholding of increment shall not be imposed on a Government servant, if the

(A) Delinquent Officer is absconding
(B) Delinquent Officer denies the charges
(C) Delinquent Officer is Hospitalised
(D) Said penalty cannot be given effect to fully while in service

மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதியின் விளக்கக் கூற்றின் (proviso) அடிப்படையில், ஊதியஉயர்வினை நிறுத்திவைத்தல் எனும் தண்டனையை, எந்தச் சூழ்நிலையில், குற்றம்ள நிரூபிக்கப்பட்ட ஒரு அரசுப் பணியாளர் மீது விதிக்க முடியாது

(A) குற்றத்துக்காளான அலுவலர் தலைமறைவாயிருந்தால்
(B) குற்றத்துக்காளான அலுவலர், குற்றச்சாட்டினை மறுத்தால்
(C) குற்றத்துக்காளான அலுவலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால்
(D) மேற்குறிப்பிட்ட தண்டனையை, அந்த அலுவலர் பணியிலிருக்கும்போது முழுமையாகச் செயலுருப்படுத்த முடியாத நிலையில்

27. In cases of stoppage of increment with cumulative effect, the monetary value equivalent to ———— times the amount of increments ordered to be withheld, shall be recovered.

(A) Two

(B) Three

(C) Four

(D) Six

திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வினை நிறுத்திவைக்கும் நேர்வுகளில், பணமதிப்பிற்கு, (monetary value) சமமதிப்புள்ள ஊதிய உயர்வுத் தொகை ———— (எத்தனை) மடங்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட வேண்டும்.

(A) இரண்டு

(B) மூன்று

(C) நான்கு

(D) ஆறு

28. Under the provisions of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, which one of the following penalties, shall be deemed as a Major Penalty

(A) Censure

(B) Withholding of increments of promotion

(C) Compulsory retirement

(D) Recovery from pay of the whole or part of any pecuniary loss caused to the Government

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விளக்கக் கூறுகளின் (provisions) அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளில், எந்தத் தண்டனையானது பெரிய தண்டனையாகக் (Major Penalty) கருதப்படுகிறது.

(A) கண்டனம்

(B) ஊதிய உயர்வு அல்லது பதவியுயர்வினை நிறுத்திவைத்தல்

(C) கட்டாய ஓய்வு

(D) அரசுக்கு, முழுமையாகவோ பகுதியாகவோ ஏற்பட்ட பண இழப்பைப் பணியாளரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்வது

29. The major penalties prescribed under the provisions of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, shall be imposed on a Government Servant, for the violation of ———————— of the Tamil Nadu Government Servants Conduct Rules, 1973

(A) Rule 1 (B) Rule 2

(C) Rule 5 (D) Rule 19

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பெரிய தண்டனைகள், இவ் விதிகளில் எந்த விதியின் கீழ் ———————— 1973–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகளை மீறுகின்ற அரசுப் பணியாளரின் மீது விதிக்கப்படலாம்.

(A) விதி 1 (B) விதி 2

(C) விதி 5 (D) விதி 19

30. Which one of the following punishments imposed upon a Government Servant shall not disqualify him for future emloyment, as per Explanation-III to rule 8 of these Rules?

(A) Reduction in rank

(B) Compulsory Retirement

(C) Dismissal from Service

(D) Removal from Service

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 8–இன் விளக்கம் – III (Explanation – III)–இன்படி, பின்வரும் தண்டனைகளில், அரசுப் பணியாளர் மீது விதிக்கப்படும் எந்தத் தண்டனை, அவரது எதிர்கால வேலைவாய்ப்பினைத் தகுதியிழக்க வைக்காது?

(A) பதவிநிலையைக் குறைத்தல்

(B) கட்டாய ஓய்வு

(C) பணி நீக்கம் (Dismissal from service)

(D) பணியறவு செய்தல் (Removal from service)

31. As per rule 10 of the above Rules, the penalty of 'Fine' as such can be imposed on a person who is a member of the ————————.

(A) Tamil Nadu Basic Service (B) Tamil Nadu General Service

(C) Tamil Nadu State Service (D) Tamil Nadu Judicial Service

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 10–இன் படி, தண்டம் (Fine) எனும் தண்டனை, பின்வரும் பணிகளில் எந்தப் பணியைச் (Service) சேர்ந்த பணியாளர் மீது விதிக்கப்படலாம்.

(A) தமிழ்நாடு அடிப்படைப் பணி (B) தமிழ்நாடு பொதுப் பணி

(C) தமிழ்நாடு மாநிலப் பணி (D) தமிழ்நாடு நீதிப் பணி

32. As per Rule 11(a) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, any of the penalties as specified in items (i), (iii), (iv), (v), (ix) in rule 8 may be imposed on the members of the Tamil Nadu State Judicial Services by

(A) The Governor

(B) The Chairman of the Commission

(C) The Chief Secretary

(D) The High Court of Judicature at Madras

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 11(a)–இன்படி, விதி 8–இன் இனங்கள் (i), (iii), (iv), (v), (ix) –இல் சுட்டிக் குறிப்பிடப்பட்டுள்ள (Specified) தண்டனைகளில், ஏதாவது ஒன்றினை தமிழ்நாடு மாநில நீதிப் பணிகளின் உறுப்பினர்கள் மீது விதிக்க யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) ஆளுநர்

(B) தேர்வாணையத் தலைவர்

(C) தலைமைச் செயலாளர்

(D) சென்னை உயர் நீதிமன்றம்

33. Under rule 14 (a)(2) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, in the case of persons appointed to a service by any authority higher than the appointing authority, the penalties mentioned in the clause shall ————

(A) Be imposed by the Appointing Authority

(B) Be imposed by any authority higher than the delinquent officer

(C) Be imposed by Head of the Department

(D) Not be imposed by any authority subordinate to such higher authority

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 14(a)(2)–இன்படி ஒரு பணியின் நியமன அதிகாரியைவிட உயர்தகுதி வாய்ந்த அதிகாரியால் (authority higher than the appointing authority) அக்குறிப்பிட்ட பணியில் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்பான நேர்வில், இவ்விதிக் கூற்றில் (clause) குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகள்

(A) நியமன அதிகாரியால் விதிக்கப்படும்

(B) குற்றத்துக்காளான அலுவலரைவிட உயர் அதிகாரமுடைய யாராலும் விதிக்கப்படும்

(C) துறைத் தலைவரால் விதிக்கப்படும்

(D) உயர்தகுதி வாய்ந்த அதிகாரியின் தகுதிக்குக் கீழ்நிலையிலுள்ள எந்த அதிகாரியாலும் விதிக்க இயலாது

34. As per the proviso (i) under Rule 16 B (2) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, in the event of a difference of opinion between the borrowing authority and the lending authority, the services of the Government Servant shall be replaced at the disposal of the

(A) Lending Authority

(B) Borrowing Authority

(C) Higher Authority

(D) Judicial Authority

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 16 B (2) – இன் விளக்கக் கூறு (i)(proviso) இன்படி, ஒரு பணியாளரை வேறொரு பணி/துறையிலிருந்து தமது அலுவலகப் பணிக்காகப் பெற்றுக்கொண்ட அதிகாரிக்கும் (borrowing), அப்பணியாளரை அனுப்பிய துறை அதிகாரிக்கும், பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் கருத்து வேறுபாடு ஏற்படும்போது, இது போன்ற நேர்வுகளில் முடிவெடுக்க, விதிகளில் யாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது?

(A) பணியாளரை அனுப்பிய அதிகாரி

(B) பணியாளரைப் பெற்றுக்கொண்ட அதிகாரி

(C) உயர் நிலை அதிகாரி

(D) நீதித்துறை அதிகாரி

35. In every case, before imposing the proposed punishment on a member of a service, he shall be given a reasonable opportunity to make any representation as per ——————— of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules ———————

(A) Rule 15(a)
(B) Rule 16 A
(C) Rule 17(a)
(D) Rule 17(e)

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், எவ்விதியின்படி, பணியிலுள்ள ஒரு உறுப்பினர் மீது விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தண்டனையை விதிப்பதற்கு முன்பு, அப் பணியாளர் தமது தரப்பு விளக்கங்களை அளிக்கப் போதுமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்?

(A) விதி 15(a)
(B) விதி 16A
(C) விதி 17(a)
(D) விதி 17(e)

36. Under rule 17(e)(1) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, where as disciplinary proceedings against a member of service is contemplated or pending, he may be

(A) Imposed with a Fine
(B) Warned
(C) Awarded with Censure
(D) Placed under Suspension

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(e)(1)–இன்படி, ஒரு பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கையானது தொடங்கப்பட்ட நிலையிலோ அல்லது நிலுவையில் இருக்கும்போதோ, அவர் மீது கீழ்க்காணும் எந்த நடவடிக்கை எடுக்கலாம்?

(A) தண்டனைக் கட்டணம் விதிக்கலாம்
(B) எச்சரிக்கலாம்
(C) கண்டனம் விதிக்கலாம்
(D) தற்காலிகப் பணிநீக்கம் செய்யலாம்

37. If the Government servant, after communicating to him, a copy of the charges, along with other necessary particulars related to the case, does not appear/submit his written statement of defence within the specificed time, the inquiring authority may

(A) Hold the inquiry Ex-parte

(B) Treat the inquiry withdrawn

(C) Issue show-cause Notice

(D) Frame charge once again

ஒரு அரசுப் பணியாளர், அவர் மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் நகல் மற்றும் அவ்வழக்கு தொடர்பான தேவையான அனைத்து விவரங்களும் அவருக்கு அனுப்பப்பட்ட பின்னரும், குறிப்பிட்ட காலவரையறைக்குள், அவரது எழுத்துமூலமான அறிக்கையை அளிக்காவிட்டாலோ அல்லது விசாரணை அதிகாரி முன்பு நேரடியாக விளக்கமளிக்காவிட்டாலோ, விசாரணை அதிகாரி

(A) ஒருதலைப்பட்ச (Ex-parte) விசாரணை நடத்தலாம்

(B) விசாரணையைக் கைவிடலாம்

(C) விளக்கம் கேட்டு அறிக்கை வெளியிடலாம்

(D) மீண்டும் குற்றச்சாட்டினைச் சுமத்தலாம்

38. Whenever the disciplinary authority is of the opinion that there are grounds for inquiring into the truth of any imputation of misconduct against a Government servant and for inquiring into the truth thereof, under rule 17(g) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, it ————.

(A) May Appoint an Authority to inquire

(B) Should not Appoint anyone

(C) May refer the case to Government

(D) May entrust the case to the Vigilance Commission

ஒரு ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி, அரசுப் பணியாளர் ஒருவரின் தவறான நடத்தைக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் ஏதாவது உண்மை இருக்கும் என்று கருதினால் அந்த உண்மையை விசாரித்து அறிய, தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(g)–இன்படி

(A) விசாரணை அதிகாரியை நியமிக்கலாம்

(B) எவரையும் நியமிக்கக் கூடாது

(C) வழக்கை அரசுக்கு அனுப்பலாம்

(D) வழக்கை விழிப்புப் பணி ஆணையத்திடம் ஒப்படைக்கலாம்

39. The Commissioner for Disciplinary Proceedings in respect shall, on a reference by the concerned disciplinary authority, hold the inquiry of a member of a service/a person holding a civil post under the state, under ———— of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.

(A) Rule 17(b)(i)
(B) Rule 17(c)(1)
(C) Rule 17(d)(i)
(D) Rule 17(e)(5)

ஒழுங்கு நடவடிக்கை ஆணையர், தொடர்புடைய ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி கேட்டுக்கொண்டபடி, மாநிலப் பணியின் ஒரு உறுப்பினர் மீது, தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், பின்வரும் விதியின்கீழ் விசாரணை மேற்கொள்ளலாம்

(A) விதி 17(b) (i)
(B) விதி 17(c) (1)
(C) விதி 17(d) (i)
(D) விதி 17(e) (5)

40. Under which rule of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, every order, notice and other process made/issued, shall be served in person on the Government servant concerned (or) sent to him by registered post with acknowledgement due etc.

(A) Rule 18(a)
(B) Rule 18(b)
(C) Rule 18(c)
(D) Rule 18(d)

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், எந்த விதியின்கீழ், ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான நேர்வுகளில் வெளியிடப்படும் ஆணை, அறிவிக்கை மற்றும் பிற நடவடிக்கைகள் முதலானவை, குற்றத்துக்காளான அரசுப் பணியாளரிடம் நேரிலோ, ஒப்புகையுடன் கூடிய பதிவுத் தபாலிலோ அல்லது வரையறுக்கப்பட்ட மற்ற பிற வழிகளிலோ வழங்கப்பட வேண்டும்?

(A) விதி 18 (a)
(B) விதி 18 (b)
(C) விதி 18 (c)
(D) விதி 18 (d)

41. As per rule 20(1) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, a member of a State Service/Subordinate Service, in whose case the Government have passed original orders, shall be entitled to submit a review petition to the Government, within a period of ———— from the date on which the order was communicated to him.

(A) One Month
(B) Two Months
(C) Three Months
(D) Five Months

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 20(1)–இன்படி, மாநிலப் பணி/சார்நிலைப் பணியின் ஒரு உறுப்பினரின் வழக்கில் வெளியிடப்பட்ட மூல ஆணை (Original Orders), அரசுக்கு மறு ஆய்வு மனுவாக அளிக்கப்படும் தகுதியைப் பெற, அவ்வாணை அன்னாருக்கு அனுப்பப்பட்ட நாளிலிருந்து (எத்தனை) ———— நாட்களுக்குள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்

(A) ஒரு மாதம்
(B) இரண்டு மாதங்கள்
(C) மூன்று மாதங்கள்
(D) ஐந்து மாதங்கள்

42. A member of the Tamil Nadu Municipal Engineering Subordinate Service, against the orders passed by the Sanitary Engineer, shall be entitled, as per proviso 1 under rule 22 of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, to appeal to

(A) Chief Engineer
(B) Executive Engineer
(C) The Government
(D) The Court

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 22–இன் விளக்கக்கூறு (1)–இன்படி, தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் சார்நிலைப் பணியின் உறுப்பினர் மீது, துப்பரவுப் பொறியாளரால் வெளியிடப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ஆணையின் மீது யாரிடம் மேல்முறையீடு செய்ய வேண்டும்

(A) தலைமைப் பொறியாளர்
(B) செயற் பொறியாளர்
(C) அரசு
(D) நீதிமன்றம்

43. Under which rule of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the appellate authority has to consider before taking a decision in the case of an appeal against an order imposing any specified penalities in the above rules.

(A) Rule 28 (B) Rule 20(1)

(C) Rule 32 (D) Rule 23(1)

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளில், விதிக்கப்பட்ட ஏதாவது தண்டனையை எதிர்த்து அளிக்கப்படும் மேல்முறையீட்டில், மேற்முறையீட்டு அதிகாரி ஒரு முடிவெடுப்பதற்கு முன், இவ்விதிகளில் பின்வரும் எந்த விதியின் கீழ் பரிசீலித்து முடிவெடுக்கவேண்டும்?

(A) விதி 28 (B) விதி 20(1)

(C) விதி 32 (D) விதி 23(1)

44. Every person preferring an appeal, shall do so seprately, and in ———— name as per rule 25 of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.

(A) All the involved deliquent officers' (B) His Colleague's

(C) One co-delinquent officer's (D) His Own

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 25–இன்படி, மேல்முறையீடு செய்ய விரும்பும் ஒவ்வொரு பணியாளரும் (யாருடைய) ———— பெயரில் அவ்வாறு மனுவளிக்க வேண்டும்.

(A) அனைத்து குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள்

(B) அவரது சகபணியாளர்

(C) ஒரு சக–குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்

(D) தமது சொந்த

45. Every appeal which is not withheld under the rules, shall be forwarded to the appellate authority by the authority from whose order the appeal is preferred wihout an expression of opinion, as per ———— of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules.

(A) Rule 19 (B) Rule 31(a)

(C) Rule 21 (D) Rule 33

இந்த விதிகளின்படி, நிறுத்திவைக்கப்படாத ஒவ்வொரு மேல்முறையீடும், எந்த அதிகாரியின் ஆணையை எதிர்த்து அளிக்கப்படுகிறதோ, அந்த அதிகாரியால் எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கப்படாமல், தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் கீழ்க்காணும் எந்த விதியின்கீழ், மேல்முறையீட்டு அலுவலருக்கு முன்வைத்து அனுப்பப்பட வேண்டும் (be forwarded)

(A) விதி 19 (B) விதி 31(a)

(C) விதி 21 (D) விதி 33

46. According to rule 36(1) of Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the Appellate Authority, other than the State Government, may take up Revision within ———— months from the date of order proposed to be revised.

(A) Two
(B) Three
(C) Four
(D) Six

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 36(1)–இன் கீழ், ஒரு மேல்முறையீட்டு அதிகாரி, மாநில அரசைத் தவிர, திருத்தம் செய்யக்கருதும் ஆணை (order proposed to be revised) வெளியிடப்பட்ட நாளிலிருந்து ———— மாதங்களுக்குள் மறு ஆய்வு (Revision) செய்யலாம்.

(A) இரண்டு
(B) மூன்று
(C) நான்கு
(D) ஆறு

47. As per rule 37 of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules, the power of Review is vested with

(A) The Commission
(B) The Governor
(C) The Government
(D) The Head of the Department

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 37–ன்படி, சீராய்வு (Review) செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது

(A) தேர்வாணையம்
(B) ஆளுநர்
(C) அரசு
(D) துறைத் தலைவர்

48. The existence of the erstwhile Tamil Nadu State and Subordinate Services Rules was upto

(A) $15^{th}$ September 2015
(B) $14^{th}$ September 2016
(C) $15^{th}$ November 2016
(D) $31^{st}$ December 2016

முன்னாளில் நடைமுறையிலிருந்த முந்தைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்புப் பணிகளுக்கான விதிகள் எந்த நாள் வரை பயன்பாட்டில் இருந்தது?

(A) 15 செப்டம்பர் 2015
(B) 14 செப்டம்பர் 2016
(C) 15 நவம்பர் 2016
(D) 31 டிசம்பர் 2016

49. The 'Fixation of Seniority', defined under sub-Section (1) of Section 40 of the existing Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, shall be deemed to have come into force on the

(A) 1st January 1955
(B) 15th January 1955
(C) 1st June 1975
(D) 15th June 1975

பணியில் முன்னுரிமையை நிர்ணயிப்பது தொடர்பாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவு 40, உட்பிரிவு (1)–இல் வரையறுக்கப்பட்டுள்ள விதி, எப்போதிருந்து நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படும்

(A) 1 ஜனவரி 1955
(B) 15 ஜனவரி 1955
(C) 1 ஜூன் 1975
(D) 15 ஜூன் 1975

50. The duty of any kind involving subjection to Naval, Army or Air Force Law 2016, Section 3(A) etc., which has been rendered either within the period commencing on the 3rd September 1939 and ending with the 21st November 1948 (or) within the period commencing on the 26th October 1952 and ending with the 10th January 1968 shall be treated as ———— under this Act.

(A) On duty
(B) Temporary duty
(C) Military duty
(D) Compulsory duty

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவு 3(A) விளக்கம் கீழ் கப்பல்படை, இராணுவம், விமானப்படை முதலிய பணிகளில் 3 செப்டம்பர் 1939 முதல் 21 நவம்பர் 1948 வரை அல்லது 26 அக்டோபர் 1952 முதல் 10 ஜனவரி 1968 வரை ஆற்றியுள்ள பணி, (இவ்வாறு) ———— கருதப்படும்.

(A) பணியிலிருந்ததாக
(B) தற்காலிகப் பணியாக
(C) இராணுவப் பணியாக
(D) கட்டாயப் பணியாக

51. When a canditate, in case his first appointment to a service, class or category has to be made in consultation with the Commission, on the date of its notification inviting applications for the recruitment and in any other case, at the time of his appointment thereto, he is not in the service of State/Central Government, as per Section 3(r) of this 2016 Act, is exactly means only as,

(A) Competitive recruitment

(B) Recruited Direct to a Service

(C) Recruited by Transfer to a Service

(D) Official Recruitment

அரசுப் பணியில், ஒரு விண்ணப்பதாரரின் முதன்முறை நியமனம், வகுப்பு (class), வகைப்பிரிவு (category), ஆகியவை தேர்வாணையத்தின் ஆலோசனையுடன் செய்யப்பட வேண்டுமாயின், அத்தகைய பணியமர்த்தலுக்காக விண்ணப்பம் செய்யக் கோரி தேர்வாணையம் விளம்பர அறிவிப்பு வெளியிடும் நாளிலும் மற்றும் பணிநியமனம் செய்யப்படும் நேரத்திலும், அந்த விண்ணப்பதாரர், எந்த மாநில/மத்திய அரசுப் பணியிலும் இல்லை என்றால், இது, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் பிரிவு 3(r)–இன்படி —————— என்றே பொருள்படும்.

(A) போட்டி நியமனம்

(B) நேரடியாகப் பணியில் நியமிக்கப்பட்டார்

(C) பணிமாற்றம் மூலம் நியமிக்கப்பட்டார்

(D) அலுவல் சார்ந்த நியமனம்

52. As per explanation (5) of Sub-section (za) under Section 3 of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act-2016, the "War Service" shall be in connection with the war of

(A) 1937-1948

(B) 1938-1947

(C) 1939-1946

(D) 1940-1945

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவு 3 உட்பிரிவு (za) விளக்கம் (5)–இன்படி, "போர்ப் பணி" என்பது, பின்வரும் ஆண்டு நடைபெற்ற போர் தொடர்பானது

(A) 1937–1948

(B) 1938–1947

(C) 1939–1946

(D) 1940–1945

53. Under Section 7(1) of the above Act, all first appointments to any class/category/grade in any State/Subordinate Service, whether by direct recruitment/by recruitment by transfer/by promotion, shall be made by the appointing authority, from a list of approved candidates prepared as specified

(A) In Schedule-IX
(B) In Schedule-X
(C) In Schedule-XI
(D) In Schedule-XII

இச்சட்டத்தின் பிரிவு 7(1)–இன்படி, எந்த மாநில/சார்நிலைப் பணியிலும், எந்தவொரு வகுப்பு/வகைப்பிரிவு/நிலை–க்கும் செய்யப்படும் முதல் நியமனம், அது நேரடி நியமனம்/பணிமாற்றம் மூலம் நியமனம்/பதவியுயர்வு மூலம் நியமனம்–போன்ற எதுவாக இருப்பினும், அது நியமன அதிகாரியால், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் பட்டியலிலிருந்து பின்வரும் (அட்டவணையில்) ———— குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்படுகிறது.

(A) அட்டவணை – IX
(B) அட்டவணை – X
(C) அட்டவணை – XI
(D) அட்டவணை – XII

54. Under this Act, the list of approved candidates for appointment by promotion and by recruitment by transfer, to all the categories of posts in the State and Subordinate Services, shall be prepared ———— against the estimated number of vacancies expected to arise during the course of a year.

(A) Bi-Monthly
(B) Quarterly
(C) Half-Yearly
(D) Annually

இச்சட்டத்தின்கீழ், பதவியுயர்வின் மூலமோ, பணிமாற்றம் மூலமோ, நியமனம் செய்யப்பட, மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள அனைத்து வகைப்பிரிவுப் பணியிடங்களுக்கும், ஒரு வருட காலகட்டத்திற்குள் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படும் காலிப்பணியிடங்கள் திட்டமிடப்பட்டு, அதற்கென, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் பட்டியல் ———— தயாரிக்கப்படும்.

(A) இரண்டு மாதங்களுக்கொரு முறை
(B) காலாண்டுதோறும்
(C) அரையாண்டிற்கு ஒருமுறை
(D) ஆண்டுதோறும்

55. As per proviso 2 to Section 7(1) of this Act, for preparing the list of approved candidates to fill up vacancies, the names of qualified candidates in the seniority list in a class/category or service shall be considered on certain proportions, if the number of vacancies estimated between 1 and 20, then the proportion for consideration of number of qualified candidates shall be ———— of the actual number of estimated vacancies.

(A) 100% (B) 150%

(C) 175% (D) 200%

இச்சட்டத்தின் பிரிவு 7(1) விளக்கக்கூறு (proviso) 2 இன்படி, காலிப் பணியிடங்களை நிரப்ப, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் பட்டியல் தயாரிப்பதற்கு, ஒரு வகுப்பு, வகைப்பிரிவு அல்லது பணியில் முதுநிலைப்பட்டியலில் இடம்பெற்றுள்ள தகுதிவாய்ந்த பணியாளர்களின் பெயர்கள் குறிப்பிட்ட வீதப்படி கருத்தில் கொள்ளப்பட வேண்டும். காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 1–க்கும் 20–க்கும் இடைப்பட்டதாகக் கணக்கிடப்பட்டால், கருத்தில் கொள்ள வேண்டிய தகுதிவாய்ந்த பணியாளர்களின் வீதம், திட்டமிடப்பட்ட காலிப்பணியிடங்களின் உண்மையான எண்ணிக்கையில் ———— ஆக இருக்கவேண்டும்.

(A) 100% (B) 150%

(C) 175% (D) 200%

56. In respect of filling up vacancies in the post of Head of Department, the number of names of qualified candidates to be considered shall be fixed as ———— number of vacancies plus three in the seniority list in a class, category or service.

(A) Twice the (B) Thrice the

(C) Four Times the (D) Actual

துறைத் தலைவர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு, கருதப்பட வேண்டிய தகுதிவாய்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை (எத்தனை மடங்கு) ———— காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதனுடன் ஒரு வகுப்பு/வகைப்பிரிவு/பணியில் முதுநிலைப் பட்டியலில் உள்ள மேலும் மூன்று பேரைக் கூடுதலாகச் சேர்த்துக் கணக்கிட வேண்டும்.

(A) இரு மடங்கு (B) மூன்று மடங்கு

(C) நான்கு மடங்கு (D) உண்மையான

57. As per explanation-I under Section 7(1) of this Act, the competent authority shall reckon the period of one-year validity for the list of approved candidates from the ________.

(A) Crucial Date

(B) Date of Approval of the Panel

(C) Date of Estimation

(D) Date of receipt of the proposal

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் பிரிவு 7(1) விளக்கம் (Explanation)–இன்படி தகுதிவாய்ந்த அதிகாரி, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் பட்டியலின், ஒரு வருட செல்லத்தக்க (validity) காலத்தை, எந்த நாளிலிருந்து கணக்கிட வேண்டும்

(A) தீர்வுக்குரிய நாள் (Crucial Date)

(B) பெயர்ப்பட்டியல் ஒப்பளிக்கப்படும் நாள்

(C) திட்டமதிப்பீடு தயாரிக்கப்படும் நாள்

(D) கருத்துரு பெறப்படும் நாள்

58. Under normal circumstances, as per Section 7(5) of this Act, if an approved candidate selected by the Commission for appointment by direct recruitment, fails to join duty oridnarily within ________ from the date of receipt of appointment order directing him to join duty, he shall forfeit his right for appointment to the post.

(A) One Month (B) Two Months

(C) Three Months (D) Five Months

இச்சட்டத்தின் பிரிவு 7(5)–இன்படி, நேரடிப் பணியமர்த்தலுக்காகத் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்படும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர், இயல்பான சூழ்நிலைகளில், பணிநியமன ஆணையில் அறிவுறுத்தப்பட்டவாறு, அவ்வாணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து சாதாரணமாக ________ காலத்திற்குள் பணியில் சேரத் தவறினால், அப்பணியிடத்தில் நியமனம் பெறுவதற்கான அவரது உரிமையை இழக்க நேரிடும்.

(A) ஒரு மாதம் (B) இரண்டு மாதங்கள்

(C) மூன்று மாதங்கள் (D) ஐந்து மாதங்கள்

59. As per the proviso to Section 9(c) of this Act, any temporary post, which is in existence for more than ———— years shall be treated as a permanent post for the purpose of this Section.

(A) 3
(B) 4
(C) 5
(D) 10

இச்சட்டத்தின் பிரிவு 9(c)–இன் விளக்கக்கூற்றின்படி (proviso) எந்தத் தற்காலிகப் பணியிடமும், ———— காலத்திற்கு மேலாக நீடித்திருந்தால், அப்பணியிடம், இப்பிரிவின் செயல்நோக்கத்தின் பொருட்டு நிரந்தரப் பணியிடமாகவே கருதப்படும்.

(A) 3
(B) 4
(C) 5
(D) 10

60. Under Section 11(1) of this Act, the Probationers/Approved Probationers and Full Members shall be discharged for want of vacancies.

(A) Randomly
(B) In the order of seniority
(C) In the order of Juniority
(D) Selectively

இச்சட்டத்தின் பிரிவு 11(1)–ன்படி, தகுதிகாண் பருவத்தினர்/தகுதிகாண் பருவம் நிறைவு செய்தவர்கள் மற்றும் பணியின் முழு உறுப்பினர்கள், காலிப்பணியிடங்கள் இல்லாதபொழுது, பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(A) அங்கொன்றும் இங்கொன்றுமாக
(B) முதுநிலைப்படி
(C) இளநிலைப்படி
(D) தேர்ந்தெடுக்கப்பட்டு

61. A member of a service, whenever selected by direct recruitment for appointment in any other service of the Government or in other State Governments, Central Government etc., shall hold the service right in the former service for a period not exceeding ———— only from the date of relief from the former service under Section 14 of this Act.

(A) One Year
(B) Two Years
(C) Three Years
(D) Four Years

இச்சட்டத்தின் பிரிவு 14–இன்படி, மாநில அரசின் மற்றொரு பணிக்கோ அல்லது பிற மாநில அரசின்/மத்திய அரசின் பணிக்கோ, நேரடி நியமனம் மூலம் தேர்வுசெய்யப்படும் ஒரு பணியின் உறுப்பினர், அவரது முந்தைய பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து ———— (காலகட்டத்திற்கு) மிகாமல் தமது முந்தைய பணியில் பணியுரிமை (Service right) பெறுவார்.

(A) ஓராண்டு
(B) இரண்டாண்டுகள்
(C) மூன்றாண்டுகள்
(D) நான்காண்டுகள்

62. As per Section 15 of this Act, in respect of the sons or the unmarried daughter of the Government servant, who died in harness while in service or retired from service on medical invalidation before attaining the age of fifty years, as the case may be, in the case of appointment on compassionate grounds the maximum age limit shall be ———— Years.

(A) Thirty (B) Thirty-Two

(C) Thirty-Five (D) Thirty-Eight

இச்சட்டத்தின் பிரிவு 15–இன்படி, பணியிலிருக்கும்போது இறந்த அல்லது 55 வயதை அடைந்த நிலையில் மருத்துவக் காரணங்களால் பணியிலிருந்து ஓய்வுபெற்ற, அரசுப் பணியாளரின் மகனோ அல்லது மணமாகாத மகளோ, கருணையடிப்படையில், அரசுப் பணியில் நியமனம் பெறுவதற்கான வயது உச்சவரம்பு ———— ஆண்டுகள் ஆகும்.

(A) முப்பது (B) முப்பத்து இரண்டு

(C) முப்பத்து ஐந்து (D) முப்பத்து எட்டு

63. To avail the concession of appointment on compassionate grounds as per proviso 1 to Explanation-II of Section 15 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, in respect of a married daughter deserted by her husband and living with the family of the deceased Government servant, it shall be with effect on and from

(A) 11th March 1982 (B) 26th October 1983

(C) 17th June 1991 (D) 16th July 1993

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 2016 பிரிவு 15, விளக்கம்–II–இன் விளக்கக்கூறு (proviso) 1–இன்படி, பணியிலிருக்கும்போது மறைந்த அரசு ஊழியரின் குடும்பத்துடன் வசித்துவரும் கணவனால் கைவிடப்பட்ட மணமான மகளுக்கு, கருணையடிப்படையிலான பணி நியமனம் என்னும் இச்சலுகை ———— முதல் நடைமுறைக்கு வருகிறது.

(A) 11 மார்ச் 1982 (B) 26 அக்டோபர் 1983

(C) 17 ஜுன் 1991 (D) 16 ஜுலை 1993

64. Under rule 16 of this Act (Employment Concession), for appointment to any post by direct recruitment, preference shall be given to the ————.

(A) National Cadet Corps

(B) National Service Scheme Volunteers

(C) Outstanding Scouts

(D) Reserved Categories

இச்சட்டப் பிரிவு 16–இன் படி, (வேலைவாய்ப்பில் சலுகை), எந்தப் பணியிடத்திற்கான நேரடி நியமனமாயிருப்பினும், ———— க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(A) தேசிய மாணவர் படை (NCC)

(B) தேசிய சேவைத்திட்ட தன்னார்வலர்கள்

(C) தலைசிறந்த சாரணர்கள் (Outstanding Scouts)

(D) ஒதுக்கீடு பெற்ற வகைப் பிரிவினர்

65. Under which rule of this Act, where the posts are outside the purview of the Commission, recruitment shall be made by calling for names of eligible candidates from the employment exchange besides inviting applications by giving advertisements in two prominent dailies.

(A) Rule 17(1) (B) Rule 17(7)

(C) Rule 18(1) (D) Rule 19(1)

இச்சட்டத்தின் எப்பிரிவின் கீழ், தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பணியிடங்களை நிரப்புவதற்கு முன்னணி செய்தித் தாள்களில் அறிவிக்கை வெளியிடுவதுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களை வரவழைத்து பணியமர்த்தம் செய்ய வேண்டும்

(A) விதி 17(1) (B) விதி 17(7)

(C) விதி 18(1) (D) விதி 19(1)

66. As per Section 20(1) of this Act, the minimum general educational qualification wherever referred to in the special rules shall mean, the qualification specified in

(A) Schedule-II (B) Schedule-III

(C) Schedule-IV (D) Schedule-VI

இச் சட்டப்பிரிவு 20(1)–இன்படி, சிறப்பு விதிகளில் பொதுவான குறைந்தபட்ச கல்வித் தகுதி என எங்கெல்லாம் குறிப்பிடப்படுகிறதோ, அந்தத் தகுதியானது பின்வரும் அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி

(A) அட்டவணை – II (B) அட்டவணை – III

(C) அட்டவணை – IV (D) அட்டவணை – VI

67. No person, as per rule 20(6)(a) of this Act, shall be eligible for appointment to any service by direct recruiment, unless he has completed eighteen years of age on the first of ———— of the year, in which the vacancy is notified.

(A) January
(B) March
(C) June
(D) July

இச்சட்டப் பிரிவு 20(6)(a)–இன்படி, எந்தவொரு பணிக்கும் நேரடிப் பணியமர்த்தம் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பிக்கும் ஒருவர், காலிப்பணியிடம் அறிவிக்கப்படும் அந்த வருடத்தின் ———— மாதத்தின் முதல் நாள், 18 வயதை நிறைவு செய்திருக்கவில்லையென்றால், அவர் அந்தப் பணிக்கு நேரடி நியமனம் மூலம் செய்யப்படத் தகுதியற்றவராவார்.

(A) ஜனவரி
(B) மார்ச்
(C) ஜுன்
(D) ஜூலை

68. As per Explanation-I(i) to sub-section (8) under Section 20 of this Act, a destitute widow's total monthly income from all sources shall not be more than ———— including any family pension or other receipts, etc.

(A) Rs. 3,000/-
(B) Rs. 4,000/-
(C) Rs. 5,000/-
(D) Rs. 6,000/-

இச் சட்டப் பிரிவு 20 உட்பிரிவு (8) விளக்கம் I(i)–இன்படி ஒரு ஆதரவற்ற கைம்பெண்ணின் மொத்த மாத வருமானம் அனைத்து வழிகளிலும், குடும்ப ஓய்வூதியம் மற்றும் பிறவகையிலான அனைத்து வருமானங்களையும் சேர்த்து ———— க்கு மேற்படாது இருக்க வேண்டும்.

(A) ரூ. 3,000
(B) ரூ. 4,000
(C) ரூ. 5,000
(D) ரூ. 6,000

69. No person shall be eligible for appointment to any service by direct recruitment unless he has an adequate knowledge of the official language of the State viz., Tamil, as per ———— of this Act.

(A) Section 19(1)
(B) Section 19(2)
(C) Section 21(1)
(D) Section 22(1)

இச் சட்டத்தின் ———— இன்படி, எந்தவொரு பணியிலும், ஒருவர் நேரடிப் பணியமர்த்தம் மூலம் நியமிக்கப்பட, மாநிலத்தின் ஆட்சி மொழியான தமிழில் போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும், இல்லையேல் அவர் அப்பணிக்குத் தகுதியற்றவராவார்.

(A) பிரிவு 19(1)
(B) பிரிவு 19(2)
(C) பிரிவு 21(1)
(D) பிரிவு 22(1)

70. Which Section of this Act prescribes that women alone shall be appointed to a post in any institution or establishment specially provided for them?

(A) Section 23 (B) Section 24

(C) Section 25(a)(i) (D) Section 26(1)

இச்சட்டத்தின் எப்பிரிவு, எந்தவொரு நிறுவனத்திலும் அல்லது அமைப்பிலும் பெண்களுக்கென்றே தனியாக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களில், பெண்கள் மட்டும்தான் நியமிக்கப்பட்ட வேண்டும் என்று வரையறுக்கிறது?

(A) பிரிவு 23 (B) பிரிவு 24

(C) பிரிவு 25(a)(i) (D) பிரிவு 26(1)

71. As per Sub-section (a) to Section 27 of this Act, regarding Reservation of Appointments, the unit of selection for appointment shall be ————.

(A) One hundred (B) One hundred and fifty

(C) One hundred and seventy-five (D) Two hundred

தனி ஒதுக்கீட்டுப் பணிநியமனம் (Reservation of Appointments) தொடர்பான இச் சட்டத்தின் பிரிவு 27, உட்பிரிவு (a)–இன்படி, பணிநியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கும் அலகு ———— ஆக இருக்க வேண்டும்.

(A) ஒரு நூறு (B) நூறு மற்றும் ஐம்பது

(C) நூறு மற்றும் எழுபத்து ஐந்து (D) இரு நூறு

72. As per clause (b) of Section 27 of this Act, in case of appointment by direct recruitment, the persons with benchmark disabilities shall be made in the turn and in the order of rotation specified in ———— as substituted vide Tamil Nadu Government Servants (Conditions of Service) Amendment Act, 2017.

(A) Schedule-III (B) Schedule-IV

(C) Schedule-V (D) Schedule-VI

இச்சட்டத்தின் பிரிவு 27, விதியின்கூறு (b)–இன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம், 2017 மூலம் மாற்றீடு (substituted) செய்யப்பட்டவாறு. நேரடிப் பணிநியமனங்களில், மாற்றுத் திறனாளிகளின் நியமனம், சுழற்சி முறையில் ———— இல் குறிப்பிட்டுள்ளபடி, நிரப்பப்பட வேண்டும்.

(A) அட்டவணை – III (B) அட்டவணை – IV

(C) அட்டவணை – V (D) அட்டவணை – VI

73. As per sub-section(g) to Section 27 of this Act, the rule of reservation, shall not apply to the appointments made ————.

(A) By Direct Recruitment (B) By Recruitment by Transfer

(C) By Promotion (D) On Compassionate Grounds

இச்சட்டத்தின் பிரிவு 27, உட்பிரிவு (g)–இன்படி, ஒதுக்கீட்டு விதி (Rule of Reservation) பின்வரும் முறையில் மேற்கொள்ளப்படும் நியமனத்திற்குப் பொருந்தாது.

(A) நேரடி நியமனம் (B) இடமாற்றம் மூலம் நியமனம்

(C) பதிவியுயர்வு (D) கருணையடிப்படையிலான நியமனம்

74. Which Section of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, prescribes conditions for completion of probation and drawal of arrears of increment?

(A) Rule 28(1) (B) Rule 29(1)

(C) Rule 29(2) (D) Rule 30

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–இன் எந்தப் பிரிவு, தகுதிகாண் பருவம் நிறைவு செய்வது மற்றும் ஊதிய உயர்வு நிலுவையைப் பெறுவது குறித்து விதிகளை வரையறுக்கிறது?

(A) விதி 28(1) (B) விதி 29(1)

(C) விதி 29(2) (D) விதி 30

75. As per Section 32(1) of this Act, at the end of the prescribed or extended period of probation, as the case may be, the appointing authority shall ———— the probationer's suitability for full membership of the service, class or category for which he was selected.

(A) Consider (B) Not Consider

(C) Extend (D) Terminate

இச்சட்டத்தின் பிரிவு 32(1)–இன்படி வரையறுக்கப்பட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவகாலத்தின் முடிவில், நியமன அதிகாரி, தகுதிகாண் பருவகாலத்தில் உள்ள பணியாளர், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பு, வகைப்பிரிவில் முழுநேர உறுப்பினராவதற்குரிய தகுதியை ஆராய்ந்து

(A) கருத்தில் கொள்ளவேண்டும் (B) கருத்தில் கொள்ளக்கூடாது

(C) நீட்டிக்க வேண்டும் (D) முடிவுக்கு கொண்டு வரவேண்டும்

76. The Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 came into force on the

(A) 1st January 1955
(B) 15th January 1955
(C) 15th January 1957
(D) 1st June 1957

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955 எப்பொழுது நடைமுறைக்கு வந்தது

(A) 1 ஜனவரி 1955
(B) 15 ஜனவரி 1955
(C) 15 ஜனவரி 1957
(D) 1 ஜுன் 1957

77. As per rule 2(e) of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955, "Government Servants" include servants of ———— also.

(A) Central Government
(B) Non-Governmental Organizations
(C) Municipality
(D) Transport Corporations

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955–இன் விதி 2(e)–இன்படி, "அரசு பணியாளர்கள்" என்பது ———— பணியாளர்களையும் குறிக்கும்.

(A) மத்திய அரசுப்
(B) அரசு சாரா நிறுவனங்கள்
(C) நகராட்சி
(D) போக்குவரத்துக் கழகங்கள்

78. As per rule 3(1) of the above Rules, the Government shall constitute ———— numbers of Tribunals for Disciplinary Proceedings for the purpose of these rules.

(A) Three
(B) Five
(C) Nine
(D) As many

இவ்விதிகளில் விதி 3(1)–இன்படி, அரசு ———— எண்ணிக்கையிலான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தினை அமைக்கலாம்.

(A) மூன்று
(B) ஐந்து
(C) ஒன்பது
(D) எவ்வளவு வேண்டுமானாலும்

79. As per rule 3(2) of these Rules, each Tribunal shall consist of ———— only who shall be the judicial officer of the rank of District Judge or the Commissioner for Disciplinary Proceedings or the Deputy Commissioner for disciplinary Proceedings.

(A) One Person
(B) Two Persons
(C) Three Persons
(D) Four Persons

இவ்விதிகளில் விதி 3(2)–இன்படி, ஒவ்வொரு தீர்ப்பாயத்திலும் மாவட்ட நீதிபதி அல்லது ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாய ஆணையர் அல்லது துணை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாய ஆணையர் ஆகியோரின் தரத்தில் நீதித்துறை அலுவலர் ———— மட்டும் இருப்பர்.

(A) ஒரு நபர்
(B) இரு நபர்கள்
(C) மூன்று நபர்கள்
(D) நான்கு நபர்கள்

80. As per Rule 4(1) of the Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, the Government, subject to the provisions of Rule (No.) ———— of these Rules, shall refer the appropriate cases to these Tribunals.

(A) 3
(B) 5
(C) 6
(D) 7

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகளில் விதி 4(1)–இன்படி, அரசு, விதி ———— யில் செய்யப்பட்டுள்ள வழிவகையின்படி (provisions) தக்க வழக்குகளை இத் தீர்ப்பாயங்களுக்கு அனுப்பும்

(A) 3
(B) 5
(C) 6
(D) 7

81. As per proviso (ii) to rule 4(1) of the above Rules, in cases where the Government propose the pass orders rejecting the appeals or petitions against the orders passed on charges of corruption, it ———— to consult the Tribunal.

(A) Shall not be necessary
(B) Shall be necessary
(C) Shall be optional
(D) Shall be conditional

இவ்விதிகளில் விதி 4(1) இல், வழிவகை (proviso)(ii) இன்படி, ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக வெளியிடப்பட்ட ஆணைகளின் மேல் செய்யப்படும் மேல்முறையீடுகள் அல்லது அளிக்கப்படும் மனுக்கள் ஆகியவற்றை நிராகரித்து ஆணையிட அரசு தீர்மானிக்கும் நேர்வுகளில், அது தீர்பாணையத்தைக் கலந்தோலோசிப்பது

(A) அவசியமில்லை
(B) அவசியம்
(C) விருப்பத்திற்குட்பட்டது
(D) கட்டாயமானது

82. Notwithstanding anything contained in sub-rule (1) or sub-rule (2) of Rule 4, cases arising in the Judicial Department ———— to the Tribunal.

(A) Shall be referred
(B) Shall not be referred
(C) May be referred
(D) If need be, can be referred

இவ் விதிகளில், விதி 4–இன் உபவிதி (1) அல்லது உபவிதி (2)–இல் அடங்கியவற்றுள் கூறப்பட்டுள்ளது எது எவ்வாறிருப்பினும், நீதித் துறையில் தொடுக்கப்படும் வழக்குகள், தீர்ப்பாயத்துக்கு

(A) அனுப்பப்பட வேண்டும்
(B) அனுப்பப்பட வேண்டியதில்லை
(C) அனுப்பப்படலாம்
(D) தேவைப்பட்டால் அனுப்பலாம்

83. As per rule 4(5) of the above Rules, in respect of matters relating to corruption in which the involvement of Secretary (except an/IAS officer) of the Tamil Nadu Public Service Commission is noticed, the Commission ———— directly refer such cases to the Tribunal, without reference to the Government.

(A) May
(B) May not
(C) Never
(D) With the approval of the Governor, may

இவ் விதிகளில், விதி 4(5)–இன்படி, ஊழல் தொடர்பான நிகழ்வுகளில் தேர்வாணையச் செயலரின் (இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தவிர) பங்கேற்பு இருப்பது தெரியவந்தால், அத்தகைய வழக்குகளைத் தேர்வாணையம், அரசுக்கு அனுப்பாமல் நேரடியாகத் தீர்ப்பாயத்துக்கு அனுப்ப

(A) இயலும்
(B) இயலாது
(C) ஒருபோதும் இயலாது
(D) ஆளுநரின் ஒப்புதலுடன் இயலும்

84. Under which rule of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, on completion of investigation, the Directorate of Vigilance and Anti-Corruption or other departmental authority concerned, shall forward all the records of the case, to the Government.

(A) Rule 5(a)
(B) Rule 6(a)
(C) Rule 7(a)
(D) Rule 8(a)

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகளில், எந்த விதியின்படி, புலன்விசாரணை முடிந்தவுடன், விழிப்புப் பணி மற்றும் ஊழல் ஒழிப்பு இயக்குநரகம் அல்லது பிற துறைகளின் தொடர்புடைய அதிகாரி, அவ்வழக்கின் அனைத்து ஆவணங்களையும் அரசுக்கு அனுப்ப வேண்டும்

(A) விதி 5 (a)
(B) விதி 6 (a)
(C) விதி 7 (a)
(D) விதி 8 (a)

85. As per te proviso to the above rule, the Directorate of Vigilance and Anti-Corruption shall forward its records to the Government through ————.

(A) The Director General of Police
(B) The Secretary, TNPSC
(C) The Vigilance Commissioner
(D) Confidential Registered Post with Acknowledgement Due

மேற்கூறிய விதியின் வழிவகையின் படி (proviso), லஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புப் பணி இயக்குநரகம் அதன் ஆவணைங்களை அரசுக்கு ———— (யார்/எதன்) வழியாக அனுப்பலாம்.

(A) காவல்துறைத் தலைமை இயக்குநர்
(B) தேர்வாணையச் செயலாளர்
(C) விழிப்புப் பணி ஆணையர்
(D) மந்தண உறையில் பதிவுத்தபாலில் ஒப்புகையுடன்

86. Notwithstanding anything contained in rule 4, the Government shall, after consulting the head of the department concerned, if necessary, decide whether the case shall be tried in a Court of Law or by the Tribunal or by the Departmental Authority concerned as per Rule ———— of the Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955.

(A) Rule 1(c)
(B) Rule 2(d)
(C) Rule 4(5)
(D) Rule 5(b)(i)

இவ் விதிகளில் விதி 4–இல் கூறப்பட்டுள்ளது எது எவ்வாறிருப்பினும், அரசுத் துறைத் தலைமையைக் கலந்தாலோசித்த பிறகு, தேவையேற்படின், வழக்கானது நீதிமன்றத்தால் முடிவுசெய்யப்பட வேண்டுமா அல்லது தீர்ப்பாயத்தாலா அல்லது தொடர்புடைய துறை அதிகாரியாலா என்பதைத் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) 1955 விதிகளில், ———— விதியின்படித் தீர்மானிக்க வேண்டும்.

(A) விதி 1(c)
(B) விதி 2(d)
(C) விதி 4(5)
(D) விதி 5(b) (i)

87. Under which sub-rule these Rules, when the Tribunal is seized of the case, the staff of the Directorate of Vigilance and Anti-Corruption and of the Police and concerned departments shall help the Tribunal in securing the necessary document, in the production of witnesses and in such other ways as the Tribunal may desire?

(A) Rule 3(2)
(B) Rule 4(2)
(C) Rule 5(e)
(D) Rule 6(b)

இவ் விதிகளில், எந்த உள்விதியின் கீழ், தீர்ப்பாயமானது வழக்கினை ஏற்றதும், விழிப்புப் பணி மற்றும் லஞ்சு ஒழிப்பு இயக்குநரகப் பணியாளரோ அல்லது காவல்துறை மற்றும் தொடர்புடைய துறைகளோ தேவையான ஆவணங்களைத் திரட்டுவதிலும், சாட்சிகளைத் தீர்ப்பாயத்திற்கு அழைத்து வருவதிலும் மற்றும் தீர்ப்பாயம் விரும்புகின்ற பிறவகையிலும் அதற்கு உதவ வேண்டும்

(A) விதி 3(2)
(B) விதி 4(2)
(C) விதி 5(e)
(D) விதி 6(b)

88. As per sub-rule (f) of rule 5 of these Rules, when the Prosecutor for Disciplinary Proceedings as the Government may appoint in respect of any particular case shall conduct enquiries on behalf of Government in disciplinary cases before the Tribunal and the accused officer concerned ———— to be represented by counsel.

(A) Shall be allowed

(B) Shall not be allowed

(C) Never be allowed

(D) If satisfies the condition may be allowed

இவ் விதிகளில், விதி 5 இன் உள் விதி (f) இன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் ஒரு குறிப்பிட்ட வழக்கில் அரசு நியமிக்கும் வழக்கறிஞர், அரசு சார்பாக விசாரணை மேற்கொண்டு தீர்ப்பாயத்தில் வழக்காடும்போது குற்றச்சாட்டுக்காளான அலுவலர், அவரது சார்ப்பில் ஒரு வழக்குரைஞரை அமர்த்திக்கொள்ள

(A) அனுமதிக்கலாம்

(B) அனுமதிக்கக்கூடாது

(C) ஒருபோதும் அனுமதிக்கலாகாது

(D) நிபந்தனையை நிறைவு செய்தால் அனுமதிக்கலாம்

89. Notwithstanding anything contained in sub-rule (f) above, it shall be in the discretion of the Tribunal concerned, as per Rule ———— of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, to allow the accused officer concerned to be represented by counel.

(A) Rule 4(1)(b)(i)

(B) Rule 4(4)

(C) Rule 5(c)

(D) Rule 5(g)

இவ்விதிகளில், மேற்குறிப்பிட்ட உள் விதி (f) இல் அடங்கியுள்ளது அது எவ்வாறு இருப்பினும், தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகளில், ———— விதியின்படி, தொடர்புடைய குற்றச்சாட்டுக்காளான அலுவலர் சார்பில், வழக்குரைஞரை அமர்த்திக்கொள்ள அனுமதிப்பதென்பது சம்பந்தப்பட்ட தீர்ப்பாயத்தின் விருப்புரிமைக்குட்பட்டதாகும்

(A) விதி 4(1) (b) (i)

(B) விதி 4(4)

(C) விதி 5(c)

(D) விதி 5(g)

90. As per Rule 6(a) of these Rules, the assessor co-opted by the Tribunal to assist it shall be an officer of the department to which the Government servants charged belongs. In respect of rank, the assessor shall be ———— that of the Government servant charged.

(A) A Rank Higher than

(B) A Rank Lower than

(C) Equal Rank

(D) In the Rank of appointing authority

இவ்விதிகளில், விதி6(a) இன்படி, தீர்ப்பாயத்திற்கு உதவுவதற்காக ஒத்துக் தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டாளர் (Assessor), குற்றம்சாட்டப்பட்ட அரசுப் பணியாளரின் துறையைச் சார்ந்தவராக இருக்க வேண்டும், படிநிலையைப் (rank) பொருத்தவரையில், மதிப்பீட்டாளர் குற்றம் சுமத்தப்பட்ட பணியாளரைவிட ———— இருக்க வேண்டும்.

(A) ஒரு படிநிலை உயர்ந்தவராக

(B) ஒரு படிநிலை தாழ்ந்தவராக

(C) ஒத்த படிநிலை உடையவராக

(D) நியமன அதிகாரி நிலையில் உள்ளவராக

91. For the purpose of sub-rule (a) of Rule 6, in any case where more than one Government servant is charged, the assessor shall be an officer ———— the rank of the highest Government servant charged.

(A) Above
(B) Equal to
(C) Below
(D) Close to

இவ்விதிகளில், விதி 6 இன் உள்விதி (a) இன் பொருட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட அரசுப் பணியாளர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில், தீர்ப்பாயத்திற்கு உதவும் மதிப்பீட்டாளரானவர் (Assessor), குற்றம் சுமத்தப்பட அலுவலர்கள் யாவருள், யார் உயர்ந்த படிநிலையிலுள்ள அலுவலரோ, அவருக்கு ———— படிநிலையில் உள்ளவராக இருக்க வேண்டும்.

(A) மேல்
(B) சம
(C) கீழ்
(D) நெருங்கிய

92. Under rule 7(b) of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955, the proceedings of the Tribunal shall be

(A) In documents
(B) In recordings
(C) In-Camera
(D) In files

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955 இல், விதி 7(b) யின்படி, தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகள் ———— இல் இருக்க வேண்டும்.

(A) ஆவணங்களில்
(B) பதிவுகளில்
(C) நீதிபதியின் தனி அரங்கில்
(D) கோப்புகளில்

93. As per rule 8(a)(ii) of these Rules, the proceedings of the Tribunal shall contain a sufficient ————.

(A) Record of the Evidence
(B) Record in writing
(C) Statement of Witnesses
(D) Matter of fact

இவ்விதிகளில், விதி 8(a) (ii) யின்படி, தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகளில் போதுமான ———— இருக்க வேண்டும்.

(A) பதிவுறுச் சான்று
(B) பதிவுறு எழுத்தில்
(C) சாட்சியங்களின் வாக்குமூலம்
(D) நடைமுறை மெய்மை

94. Under sub-rule (b) of rule 8 of the above Rules, where the officer concerned has absconded or where it is for other reasons impracticable to communicate with him or where he does not take part in an enquiry, the enquiry

(A) Shall not proceed
(B) Shall still proceed
(C) May be withdrawn
(D) Can be continued only if he is available

மேற்குறிப்பிட்ட விதிகளில், விதி 8 உள்விதி (b) யின்படி, தொடர்புடைய அலுவலர் தலைமறைவாயிருந்தாலோ அல்லது வேறு காரணங்களால் அவரைத் தொடர்புகொள்ள இயலாத நிலையிருந்தாலோ அல்லது அவர் விசாரணயில் கலந்துகொள்ளாவிட்டாலோ, விசாரணையானது

(A) தொடரக் கூடாது
(B) தொடர்ந்து நடைபெறும்
(C) திரும்பப் பெறலாம்
(D) அவர் வந்தால் மட்டுமே தொடர வேண்டும்

95. All or any of the provisions of sub-rule (a) may, in exceptional cases, for special and sufficient reasons to be recorded in writing, be waived by the Tribunal where there is difficulty in observing the requirements of that sub-rule and the requirements can be waived without injustice to the person charged as per rule ———— of these Rules.

(A) Rule 8(a)(i)
(B) Rule 8(a)(ii)
(C) Rule 8(b)
(D) Rule 8(c)

இவ்விதிகளில் ———— விதியின்படி, அனைத்து அல்லது உள்விதி–(a) இன் வழிவகைகளில் (provisions) எதாவதொன்றின்படி, மேற்குறிப்பிட்ட உள்விதியில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவுசெய்ய இயலாத விதிவிலக்கான நேர்வுகளில், குற்றச்சாட்டுக்காளான நபரைப் பாதிக்காத வகையில், சிறப்பியல்புடைய மற்றும் போதிய காரணங்களுக்காக, எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்குத் தீர்ப்பாயம் விலக்களிக்கலாம்.

(A) விதி 8 (a) (i)
(B) விதி 8 (a) (ii)
(C) விதி 8 (b)
(D) விதி 8 (c)

96. According to sub-rule (d) of Rule 8 of these Rules, (i) in regard to procedure to be followed in cases other than those of corruption; and (ii) in regard to any other matter for which no specific provision has been made in these rules, the provisions of the following Rules shall apply :

(A) Tamil Nadu Public Service Commission Regulations, 1954
(B) Tamil Nadu Government Servants Conduct Rules, 1973
(C) Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules
(D) Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016

இவ்விதிகளில், விதி 8, உள்விதி (d) இன்படி, (i) ஊழல் தவிர்த்த பிற வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், மற்றும் இவ்விதிக்ளில் எந்தவிதமான குறிப்பிட்ட வழிவகையும் செய்யப்படாத மற்ற பிற நேர்வுகள், ஆகியவற்றுக்கு, கீழ்க்காணும் விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிவகைகள் (provisions) பொருந்தும்.

(A) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954
(B) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973
(C) தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்
(D) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) 2016

97. The Government may, by order in writing, withdraw any case referred to a Tribunal under these rules and pending before that Tribunal and transfer such cases to another Tribunal for enquiry as per Rule ———— of these Rules.

(A) Rule 8A (B) Rule 8A(ii)

(C) Rule 8A(b) (D) Rule 8B(b)

இவ்விதிகளில், பின்வரும் விதி ———— இன்படி, அரசு, எழுத்துவடிவிலான ஆணையில் ஒரு தீர்ப்பாயத்துக்கு வழக்கு விசாரணைக்காகப் பரிந்துரைக்கப்பட்டு அங்கு நிலுவையிலுள்ள எந்தவொரு வழக்கையும், அங்கிருந்து மற்றொரு தீர்ப்பாயத்துக்கு விசாரணைக்காக மாற்ற முடியும்

(A) விதி 8 A (B) விதி 8 A(ii)

(C) விதி 8 A(b) (D) விதி 8 B(b)

98. As per Rule 9 of Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955, after the enquiry has been completed, the Tribunal shall send its findings to the Government to the effect whether the charges against the person charged are proved or not. Where the charges are proved, the penalty to be imposed on the person charged shall be ————.

(A) Recommended by the Tribunal

(B) Decided by the Government or the Head of Department

(C) Obtained from the Commission

(D) Sought from the Vigilance Commission

தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955 இல், விதி 9 இன்படி, தீர்ப்பாயமானது, விசாரணை முடிந்தவுடன், தான் கண்டறிந்தவைகளை அதாவது ஒரு அலுவலர் மீதான குற்றச்சாட்டுகள், நிரூபணமாயிற்றா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் அரசுக்கு அறிக்கையை அனுப்பவேண்டும், குற்றச்சாட்டுகள் நிரூபணமானால், அந்த நபர் மீது விதிக்கப்படும் தண்டனை

(A) தீர்ப்பாயத்தால் பரிந்துரைக்கப்படும்

(B) அரசால் அல்லது துறைத் தலைவரால் தீர்மானிக்கப்படும்

(C) தேர்வாணையத்திடமிருந்து பெறப்படும்

(D) விழிப்புப் பணி ஆணையத்திடமிருந்து கோரப்படும்

99. As per Rule 10(A) of the above Rules, in cases other than those of the employees of the Municipal Corporations enquired into by the Tribunal, to impose a penalty in cases relating to Officers of State Service or Officers of Subordinate Service in whose cases the Government disagree with the findings of the Tribunal, the competent authority shall be ————.

(A) The Tribunal
(B) The Government
(C) The Commission
(D) The Vigilance Commission

நகராண்மைக் கழக ஊழியர்களைத் தவிர்த்த பிற வழக்குகளில், அதாவது மாநிலப் பணி அல்லது சார்நிலைப் பணி அலுவலர்கள் தொடர்பான தீர்ப்பாயம் விசாரணை மேற்கண்ட வழக்குகளில், தீர்ப்பாயம் கண்டறிந்தவற்றை அரசு ஏற்றுக்கொள்ளாத நேர்வுகளில், மேற்காணும் விதிகளில், விதி 10 (A) இன்படி, தகுதிவாய்ந்த அதிகாரி

(A) தீர்ப்பாயம்
(B) அரசு
(C) தேர்வாணையம்
(D) விழிப்புப் பணி ஆணையம்

100. On receipt of the findings of the Tribunal, if the whole or part of the charges are held proved, a copy of the report shall be communicated to the delinquent officer for making further representation, if any, within a reasonable time (under Rule 10(a) of these Rules), but not exceeding ————.

(A) One-Month
(B) Two Months
(C) Seventy-Five days
(D) Nienty days

ஒரு வழக்கிலிருந்து கண்டறியப்பட்டவை (findings) குறித்த தீர்ப்பாயத்தின் அறிக்கையைப் பெற்றதும், அதில், தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் முழுமையாகவோ பகுதியாகவோ நிரூபணமாயிருந்தால், அதன் நகலினை குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருக்கு அனுப்பி, அவ்வறிக்கையின்மீது அவர் தரப்பு விளக்கம் ஏதாவதிருந்தால் அதனை அளிக்க, போதிய கால அவகாசம் (இவ்விதிகளில், விதி 10(a) இன்படி), அதாவது பின்வரும் காலத்திற்கு ———— மிகாமல் அளிக்கப்படவேண்டும்.

(A) ஒரு மாதம்
(B) இரண்டு மாதங்கள்
(C) எழுபத்தைந்து நாட்கள்
(D) தொன்னூறு நாட்கள்